**08.04.2026**

MC.No. 06/2022 ராஜலெட்சுமி க/பெ. சுரேந்தர் PW1

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Com படித்துள்ளேன். திருமணத்திற்கு முன்பு நான் வேலைக்கு சென்றேனா என்றால் இல்லை. எனது கணவர் என்ன படித்துள்ளார் என்றால் B.E., Aeronatical படித்துள்ளார். எதிர்மனுதாரர் அவர்களது பெற்றோர்களுக்கு ஒரே பையன் என்பதும், அவர்கள் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்பதும் திருமணத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே கூட்டுக் குடும்பமாக தான் வாழ வேண்டும் என பேசி முடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாய் மற்றும் தந்தைக்கு வருமானம் வரக்கூடிய தொழில்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தந்தை கால்டாக்ஸி வைத்து வாடகைக்கு ஓட்டி வருகிறார். அவரது அம்மா டைலரிங் ஷாப் வைத்துள்ளார். நான் மேற்சொன்ன விவரத்தை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும், வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறார்கள் என்றாலும், நான் அந்த விவரங்களை தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் எதிர்மனுதாரரின் சொந்த ஊரான இராஜபாளையத்தில் இருந்தேன் என்றால் 20 நாட்கள் இருந்தேன். அந்த 20 நாட்களுக்குள் நான்

எதிர்மனுதாரரிடம் தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என பிரச்சனை செய்ததால் தான் பெங்களூருக்கு நானும், எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் சரியல்ல. பெங்களூருக்கு சென்ற பிறகு நான் ஆன்லைனில் தேவையற்ற உபயோகமில்லாத பொருட்களை வாங்கி தருமாறு எதிர்மனுதாரரிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் கேட்ட பொருட்களில் தேவையற்ற பொருட்களை தவிர்த்துவிட்டு ஃபிரிட்ஜ், டிவி வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர் உரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதன் பின்னிட்டு தான் முதல் விசாரணை வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். எதிர் உரையில் எதிர்மனுதாரர் உண்மைகளை சொன்ன காரணத்தினால் தான் நான் அதை மறுத்து எந்த விவரங்களையும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் TCS நிறுவனத்தில் பணிபுரிந்ததற்கான ஆவணங்களையோ, அங்கு அவர் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்பதற்கான ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் 2019ம் வருடம் ரூ.65,000/- வருமானம் பெற்று வந்தார். இந்த விவரத்தை தான் எனது மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பிலிருந்து குழந்தை பிறக்கும் வரை எதிர்மனுதாரர் TCS நிறுவனத்தில் ஒப்பந்த ஊழியராக தான் பணிபுரிந்து வந்தார் என்றாலும், நான் சொல்வது போல் அவர் சம்பளம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் பெங்களூரில் இருக்கும்போது கருவுற்ற பிறகு யார் என்னை வந்து பார்த்தார்கள் என்றால் எனது மாமனார், மாமியார் வந்து பார்த்தார்கள். அப்போது கொரோனா காலகட்டம் என்றால் சரிதான். என்னை பார்த்துக் கொள்வதற்காக எனது

மாமனார், மாமியார் என்னுடன் பெங்களூரில் வந்து இருந்தார்கள் என்றால் சரிதான். நான் அப்போது என்னை பார்த்துக் கொள்வதற்கு எனது அம்மா வருவார்கள், நீங்கள் இங்கே இருக்கக் கூடாது அவ்வாறு இருந்தால் தற்கொலை செய்து கொள்வேன் என்று சொல்லி எனது மாமனார், மாமியாருடன் சண்டையிட்டு இரவோடு இரவாக அவர்களை அங்கிருந்து கிளம்ப சொன்னேன் என்றால் சரியல்ல. கொரோனா காலம் என்பதால் பயணம் செய்ய முடியாததால் எனது கணவரின் நண்பரின் வீட்டில் தான் அந்த இரவு முழுவதும் எனது மாமனார், மாமியார் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பின் அவர்கள் ஊருக்கு வந்துவிட்டார்கள் என்றால் 1 வாரம் என்னுடன் இருந்த பிறகு ஊருக்கு வந்துவிட்டார்கள். நான் கர்ப்பமாக இருக்கும் போது வளைகாப்பு வரை எதிர்மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்துக் கொண்டார் என்றாலும் சரியான தேதிகளில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றாலும் சரிதான். எனக்கு வளைகாப்பு எனது அம்மா திருச்சியில் வைத்து செய்தார் என்றால் சரிதான். எனக்கு குழந்தை குறை மாதத்தில் பிறந்தது என்றால் சரிதான். தகவல் தெரிந்தவுடனேயே எதிர்மனுதாரர் என்னை பார்ப்பதற்காக நிறுவனத்தில் பணிபுரியும் மடிக்கணினியுடன் வீட்டில் இருந்தே வேலை செய்வதற்காக வந்துவிட்டார் என்றால் மறுநாள் காலை வந்தார். மடிக்கணினி எதுவும் வரவில்லை. வீட்டில் இருந்து வேலை செய்யும் நோக்கத்தோடு வரவில்லை. நானும், குழந்தையும் வேறு வேறு மருத்துவமனைகளில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் தான் என்னையும் குழந்தையையும் பார்த்துக் கொண்டு வீட்டில் இருந்தே வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. அப்போது அவர் குழந்தை பேறு விடுப்பில் (Paternity) இருந்தார். நான் மேற்சொன்ன விவரத்தை மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லாமல் தற்போது வழக்கிற்காக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு எதிர்மனுதாரர் எனது வீட்டில் வந்து இருந்தார் என்றாலும், நான் அவரது மடிக்கணினியை பிடுங்கி விட்டு அவரை அனுப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல. குழந்தை பிறந்ததற்கான செலவுகளை எதிர்மனுதாரரும், எனது அம்மாவும் சேர்ந்து தான் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. எனது அம்மா மட்டுமே அனைத்து செலவுகளையும் பார்த்தார். குழந்தை பிறந்த பிறகு நான் எதிர்மனுதாரரிடம் உன்னுடன் வாழ வரமுடியாது, மாதம் ரூ.20,000/- தர வேண்டும் என எனது வீட்டில் வைத்து எனது உறவினர்கள் முன்னிலையில் பேசினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பேசிதான் குழந்தைக்கு பெயர் வைக்கும் விழாவிற்கு எதிர்மனுதாரரின் பெற்றோர்களை அனுமதித்தோம் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 22.04.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.04.08 15:47:42 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி